# நாளை வடக்கு - கிழக்கில் பூரண ஹர்த்தால்! நீதிக்கான போராட்டத்திற்கு பூரண ஆதரவு

## தமிழ்த்தேசியக் கட்சிகளும் அறிவிப்பு!

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் நாளை முன்னெடுக்கப்படவுள்ள பூரண கதவடைப்புப் போராட்டத்திற்கு தமிழத் தேசியக் கட்சிகள் முழுமையான ஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளன.

குறித்த கதவடைப்புப் போராட்டம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கங்கள் கொக்குத் தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்தில் ஒரு சர்வதேச விசாரணையைக்கோரி நிற்பதை தாம் வரவேற்பதோடு, அவர்களின் போராட்டத்திற்கு ஆதரவளிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையில், அவர்களுக்கு பல்வேறு அழுத்தங்கள் ஏற்படும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எனினும், அவர்கள் கதவடைப்புப் போராட்டத்தை முன்னெடுப்பதற்குத் தீர்மானம் எடுத்திருப்பதைத் தாம் ஆதரிக்கின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போராட்டத்திற்கான அழைப்புத் தொடர்பாகத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா கருத்துத் தெரிவிக்கையில், இது இன அழிப்பிற்குள்ளாகிய தமிழ் மக்களின் துக்க காலம் எனத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நீதிகோரி போராடும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நாளைய தினத்தை துக்க தினமாக அறிவித்துள்ளமையை தாம் ஆதரிப்பதோடு, பூரண கதவடைப்புப் போராட்டத்திற்கும் ஆதரவு வழங்குவதாக அவர் கூறினார்.

தமிழர் புதைகுழிக்குள் புதைக்கப்பட்டு, அழிக்கப்பட்டமை இலங்கையின் கறைபடிந்த வரலாறே எனவும் அவர் குறிப்பிட்டார்.

அந்த ஆத்மாக்களுக்கு ஆறுதலும் வருங்காலத் தமிழினத்திற்கு நீதியும் விடுதலையும் கிடைக்க வேண்டி நடைபெறும் கிளர்ச்சிகளையும், போராட்டங்களையும் ஆதரித்துக் கடைப்பிடிக்க வேண்டியது தம் கடப்பாடு எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களது யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் மாவட்டச் சங்கங்களின் தலைவிகள் இணைந்து கூட்டாக இந்தக் கதவடைப்புப் போராட்டத்திற்கான அழைப்பை விடுத்துள்ளனர்.

போராட்டம் வெற்றியடைய வடக்கு - கிழக்கில் வாழும் அனைத்துத் தமிழ், முஸ்லிம் மக்கள் மற்றும் நீதி, நேர்மையை விரும்புகின்ற சிங்கள மக்கள் என அனைவரும் தங்களின் பூரண ஆதரவை வழங்க வேண்டுமெனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க)


# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 10 வியாழக்கிழமை 27.07.2023 கதிர் 38



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஹர்த்தாலுக்கு ஆதரவாக அறிக்கை வெளியீடு

கொக்குத்தொடுவாய்ப் புதைகுழியில் இறந்தோருக்கு நீதி கோரிய வடக்கு - கிழக்குத் தழுவிய முழு கடையடைப்பு போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை வழங்குவ-தாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு அனுப்பிவைத்த ஊடக அறிக்கையில், முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத் தொடுவாயில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிக்குப் பின்னணியாக இருந்த சம்பவம் என்ன? அங்கு கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள், உடைகள் மற்றும் ஏனைய பொருட்கள் யாருடையவை? என்பன குறித்துப் பக்கச்சார்பற்ற விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுப் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் வடக்குக் கிழக்கு முழுவதும் வெள்ளிக்கிழமை முழுக் கடையடைப்பு நடாத்துவதற்கு வடக்குக் கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

அதே தினத்திலே, வட்டுவாகல் பாலத்தில் 2▶

## வவுனியா மாவட்டத்தில் சங்கங்களின் நிலைப்பாடு!



கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரியும், சர்வதேச 2▶

## நாளையதினம் ஹர்த்தாலுக்கு ஆதரவாக முல்லையில் போக்குவரத்தும் முடங்கும்!

கொக்குத்தொடுவாய் மனிதப்புதகுழி விவகாரத்துக்கு நீதி கோரியும் சர்வ தேச நிபுணர்களின் கண்காணிப்பை வலியுறுத்தியும் நாளை மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டத்துக்கும் பூரண கதவடைப்பிற்கும் வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவுகள் அழைப்பு விடுத்துள்ளனர்.

அதற்கமைய முல்லைத்தீவு மாவட் டத்தில் நாளை இடம்பெறவுள்ள கத வடைப்புப் போராட்டத்திற்கு, முல் லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளது.

ஆகவே, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் கோரிக்கைக்கு அமைய நாளை முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து சேவைகள் நிறுத்தப்பட்டு, பூரண ஆதரவு வழங்கப்படும் எனவும், நாளை முல்லைத்தீவில் தனியார் போக்குவரத்துச் சேவைகள் எவை யும் இடம்பெறாது எனவும் 2▶

## நாளைய பூரண முடக்க கோரிக்கைக்கு யாழ் பல்கலை ஊழியர் சங்கமும் ஆதரவு

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்தில் நீதி கோரியும், சர்வதேசத் தின் கண்காணிப்பை வலியுறுத்தியும் நாளை வடக்கு - கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்படவுள்ள முழு அடைப்புப் போராட்டத்திற்கு யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கமும் பூரண ஆதரவினை வழங்குகின்றது.

இலங்கையின் தமிழர் பிரதேசங்களில் இதுகால வரையிலும் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் விவகாரங்கள் பூசி மெழுகப்பட்டு, காத்திரமான நடவடிக்கைகள் எதுவுமின்றி நீர்த்துப்போகச் செய்யப்பட் டமையே வரலாறு. இதேபோன்று மேற்படி கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவ காரத்திலும் நடைபெறாது இருக்கவேண்டும் என்பதோடு, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி உட்பட தமிழர் பிரதேசங்களில் கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து மனிதப் புதைகுழிகளும் உரிய வகையில் சர்வ தேச கண்காணிப்புடன் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு உண்மைகளை வெளிக்கொணர வேண்டியது அவசிய மானது என்பதனை 2▶

## முள்ளிவாய்க்காலுக்குச் சென்ற புனித பாப்பரசரின் பிரதிநிதி



பாப்பரசர் பிரான்ஸிஸின் பிரதிநிதி, வணக்கத் திற்குரிய கலாநிதி பிறயன் உடக்வே நேற்று முன்வைத்தீவுக்கு விஜயம் மேற்கொண்டிருந் தார். 2▶

## 339 மில்லியன் ரூபா மின்சாரக்கட்டண நிலுவை கொழும்பு வைத்தியசாலைக்கு சிவப்பு எச்சரிக்கை!

இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய 339 மில்லியன் ரூபா பணம் செலுத்தப்படாமையினால், கொழும்புத் தேசிய வைத்தியசாலைக்கு மின்வெட்டுக் கான சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட வேண்டிய நிலுவைத்தொகை ஐந்து மாத காலமாக வழங்கப்படா ததால், வைத்தியசாலையின் செயற்பாடுகள் பாதிக்கப் படும் அபாயம் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சத்திரசிகிச் சைப் பிரிவில் தற்போது அதிகளவான 2▶




- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

## பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் நாளை இலங்கைக்கு வருகிறார்!



பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் நாளை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை ஆழப்படுத்தவும், பிராந்திய மற்றும் உலகளாவிய சவால்கள் குறித்து விவாதிக்கவும் இந்தப் பயணம் ஒரு வாய்ப்பாக அமையும் எனக் கருதப்படுகிறது. கடந்த திங்கட்கிழமை முதல் புதன்கிழமை வரை நியூ கலிடோனியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த பிரான்ஸ் ஜனாதிபதி, இலங்கை வருவதற்கு முன்னர் வனுவாட்டு மற்றும் பப்புவா நியூ கினி ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரான்ஸ் ஜனாதிபதி ஒருவர் இலங்கைக்கு மேற்கொள்ளும் முதலாவது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விஜயம் இதுவாகும். (மி)

## வசந்த முதலிகே மீண்டும் கைது!

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே கறுவாத்தோட்டப் பொலிஸாரால் இன்று மீண்டும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நீதிமன்றம் பிறப்பித்துள்ள பிடியாணை ஒன்றுக்கு அமைய அவர் கைது செய்யப்பட்டு, கறுவாத்தோட்டப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கடந்த ஆண்டு நடைபெற்ற போராட்டத்தின் பின்னர், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட வசந்த முதலிகே, 90 நாட்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## செம்பியன்பற்று வடக்குப் பகுதியில் இன்றும் காணி சுவீகரிக்கும் முயற்சி

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசத்தில் செம்பியன்பற்று வடக்குப் பகுதியில், தனியாருக்குச் சொந்தமான காணிகளை இலங்கை கடற்படையினருக்கு நிரந்தரமாக சுவீகரிக்கும் நோக்குடன் இன்றும் காணி அளவீட்டு முயற்சி இடம்பெற்றுள்ளது.

தனியாருக்குச் சொந்தமான 15 பேர்ச் (ஒன்றரைப் பரப்பு) காணியை இலங்கை கடற்படையினருக்கு நிரந்தரமாக சுவீகரிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட இருந்த காணி அளவீட்டுப் பணி மக்கள் எதிர்ப்பால் இன்றும் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது.

இதன்போது, பிரதேச மக்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட பலரும் பங்கேற்றிருந்தனர்.

## இலங்கையில் புற்றுநோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது

இலங்கையில் தற்போது புற்றுநோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துவருவதாக சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் பணிப்பாளரும், சமூக பல் மருத்துவ நிபுணருமான இஷானி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இலங்கையில் நிகழும் மரணங்களுக்கான காரணிகளில் இரண்டாவது இடத்தில் புற்றுநோய் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பதிவாளர் திணைக்களத்தின் தரவுகளின்படி, 2019 ஆம் ஆண்டில் 15,599 பேர் புற்றுநோயால் இறந்துள்ளனர். 2020 இல், 37,649 புதிய நோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர். இந்தக் காலப்பகுதியில் நாங்கள் மிகப்பெரிய அதிகரிப்பைக் காண்கிறோம்.

ஆண்களுக்கு ஏற்படும் புற்று நோய்களில் வாய்ப்புற்றுநோயே அதிகளவில் காணப்படுகிறது. எனக்குத் தெரிந்தவரை புகையிலை பயன்பாட்டைக் குறைக்க இலங்கையில் போதிய திட்டங்கள் இல்லை. எனவே, நம் நாட்டில் புகைப் பொருட்களுக்கு எதிராக அதிக வேலைத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (மி)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தினை சென்றடையும் வகையிலான ஒரு பேரணியும் இடம்பெறவுள்ளது. இந்த முழுக் கடையடைப்புக்கும் பேரணிக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் முழுமையான ஆதரவினையும், ஒத்துழைப்பினையும் வழங்குகிறது.

இலங்கையில் சுதந்திரத்துக்குப் பிந்தைய காலத்திலே பல்வேறு மனிதப் புதைகுழிகள் சூரியக்கந்த, செம்மணி, யாழ்ப்பாணத்தின் துரையப்பா விளையாட்டரங்கு, மாத்தளை, களுவாஞ்சிக்குடி மற்றும் மன்னார் போன்ற இடங்களிலே கண்டுபிடிக்கப்பட்டன.

இலங்கையினை ஆட்சி செய்த அரசுகள் இன ரீதியாகவும், மத ரீதியாகவும், வர்க்க ரீதியாகவும் மேற்கொண்ட அடக்குமுறைகளுக்கு எதிராக வெவ்வேறு சந்தர்ப்பங்களிலே போராடிய பல்வேறு இயக்கங்களையும், அமைப்புக்களையும் சேர்ந்தோர், சட்டத்துக்குப் புறம்பான முறையிலே, இராணுவமயமாக்கப்பட்ட சூழலிலே படுகொலை செய்யப்பட்டனர்.

அத்துடன், மனித உரிமைகளை முன்னிறுத்திச் செயற்பாட்டாளர்களும், பத்திரிகையாளர்களும், மாற்றுக் கருத்தினைக் கொண்டிருந்த வெவ்வேறு போராட்ட இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் கூட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாத நிலை இன்று வரை நீடிக்கிறது.

இவ்வாறு போராட்டங்களிலே ஈடுபட்டுவர்களினதும், செயற்பாட்டாளர்களினதும், பொதுமக்களினதும் உடலங்களின் எச்சங்களே இந்தப் புதைகுழிகளிலே கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது.

நாட்டிலே இடம்பெற்ற வன்முறைகளிலே வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உடலங்களே இந்தப் புதைகுழிகளிலே கண்டுபிடிக்கப்பட்டுள்ளனவா? என்ற பயம் அவர்களின் உறவினர் மத்தியிலும், பொதுமக்கள் மத்தியிலும் உருவாகியுள்ளது.

இந்தப் புதைகுழிகள் பற்றி முறையான விசாரணைகளை முன்னெடுத்து நீதியினைப் பெற்றுக்கொடுப்பதற்கு இலங்கையினை ஆட்சி செய்த அரசுகள் நம்பகமான எந்தச் செயன்முறையிலும் ஈடுபடவில்லை.

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தொடர்ந்தும் வேதனையினை அனுபவித்து வருவதுடன், கடுமையான பொருளாதாரச் சுமையினையும், அரசின் அச்சுறுத்தல்களையும் அவர்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

அண்மையில் முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய்ப் புதைகுழியிலே கண்டுபிடிக்கப்பட்ட உடைகள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சீருடைகளாக இருக்கின்றன. சரணடைந்த, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களுக்கு என்ன நடந்தது என்ற கேள்வியினை முன்வைத்து, நீதி கோரும் வகையில், அவர்களின் உறவினர்களும், பொதுமக்களும் பல வருடங்களாகத் தொடர் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

கொக்குத்தொடுவாயில் கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழிகள் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பது தொடர்பிலே பயத்தினையும், வேதனையினையும் அவர்களின் குடும்பத்தவர் மத்தியிலும், ஒட்டுமொத்த சமூகத்திலும் ஏற்படுத்தியிருக்கிறது.

வெள்ளிக்கிழமை இடம்பெறும் முழுக்கடையடைப்பும், பேரணியும் கொக்குத்தொடுவாயிலே கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழி குறித்து நாட்டினதும், உலகினதும் கவனத்தினையும் ஈர்க்கும் வகையிலே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இலங்கை அரசிலே வேரூன்றிப் போயிருக்கும் சட்டத்துக்குப் புறம்பான கொலை செய்யும் கலாசாரத்தினை வெளிப்படுத்தும் வகையிலே அமைகின்றன.

எனவே இந்தப் போராட்டத்துக்கு பொதுமக்களும், தொழிற்சங்கங்களும், பொது அமைப்புக்களும் ஆதரவு கொடுக்க வேண்டும்.

கொக்குத்தொடுவாய் புதைகுழி குறித்தும், நாட்டிலே கண்டுபிடிக்கப்பட்ட ஏனைய புதைகுழிகள் குறித்தும் முறையான, நேர்மையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, இந்தப் புதைகுழிகளுக்குப் பின்னணியாக இருந்த வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்களது உறவுகளுக்கும் நீதி கிடைக்க வேண்டும். அத்துடன் வடக்குக் கிழக்கிலே வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பது குறித்து அரசு உடனடியாக மக்களுக்குப் பொறுப்புக் கூறுவதுடன், அவர்களிற்கான நீதியும் கிடைப்பதற்கு வழி செய்யப்படல் வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வெள்ளிக்கிழமை இடம்பெறும் முழுக் கடையடைப்புக்கும் பேரணிக்கும் தனது முழுமையான ஆதரவினை வழங்குகிறது - என்றுள்ளது. (01)

## வவுனியா மாவட்டத்தில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிபுணத்துவ கண்காணிப்பை வலியுறுத்தியும் நாளை மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்துக்கும் பூரண கதவடைப்பிற்கும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அழைப்பு விடுத்திருந்தனர்.

எனினும், கதவடைப்புப் போராட்டம் தொடர்பாக வவுனியா மாவட்டத்திலுள்ள வர்த்தக சங்கம், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம், தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் மற்றும் மாவட்ட சிகை அலங்கார சங்கம் ஆகியவற்றிற்கு கதவடைப்புத் தொடர்பாக இதுவரை எவரும் கோரிக்கை விடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த வவுனியா வர்த்தக சங்கத்தினர், தமக்கு கோரிக்கை எவையும் கிடைக்கப்பெறாமையினால் எவ்விதத் தீர்மானத்தையும் தாங்கள் மேற்கொள்ளவில்லை என குறிப்பிட்டனர்.

இதேவேளை, வவுனியா தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர் தெரிவிக்கையில், தமது பேருந்துகள் நாளை முல்லைத்தீவு மாவட்டத்திற்கு மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்படாது என்பதுடன் ஏனைய பகுதிகளுக்கான சேவைகளை நடாத்துவது பேருந்து உரிமையாளர்களின் தனிப்பட்ட விருப்பம் என கூறினர்.

மாவட்டத்திலுள்ள ஏனைய சங்கங்களின் நிலைப்பாடே தமது நிலைப்பாடாக அமையும் எனவும், இதுவரை எவ்வித முடிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட சிகை அலங்கார சங்கத்தினருக்கும் இது தொடர்பாக எவ்விதக் கூட்டங்களும் இடம்பெறவில்லை எனவும், தமது நிலைப்பாடு தொடர்பில் ஊடகங்களுக்கு தற்போது கருத்து தெரிவிக்க முடியாது என்றும் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## நாளையதினம் ஹர்த்தாலுக்கு .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு மாவட்ட தனியார் போக்குவரத்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (க)

## நாளைய பூரண முடக்க .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இவ்விவகாரத்தின் நியாயத்தன்மையினைப் புரிந்துகொண்டு, இதனைத் தமது தனிப்பட்ட சுயலாபங்களுக்கோ, அரசியல் தேவைகளுக்கோ பயன்படுத்தாது உண்மையான தீர்வினை வலியுறுத்தி சிங்கள முற்போக்குச் சக்திகள் உட்பட்ட அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து போராட வேண்டுமென்பதோடு அனைவரினதும் முழு ஆதரவினையும் வேண்டி நிற்கிறோம், என்று அந்தச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முள்ளிவாய்க்காலுக்குச் சென்ற ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத் தீவு முள்ளிவாய்க்கால் புனித சின்னப்பர் ஆலயத்திற்குச் சென்ற அவர், யுத்தத்தில் உயர்நீத்த மக்களுக்காக சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். இதனைத் தொடர்ந்து, அங்கு தெரிவு செய்யப்பட்ட விசேட தேவையுடைய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளையும் அவர் வழங்கினார்.

வட்டுவாகல் பாலம் தொடக்கம் முல்லைப்பட்டினம் சுற்றுவளைவு வரை முல்லை மறைக்கோட்ட இளையோர் ஒன்றியத்தின் மோட்டார் வாகன வரவேற்பு இவருக்கு அளிக்கப்பட்டது.

இதனையடுத்து சுனாமி நினைவாலய தரிசிப்பிலும் புனித இராயப்பர் ஆலயத்தில் இடம்பெற்ற நற்கருணை ஆசீர்வாதத்திலும் அவர் பங்கேற்றிருந்தார்.

## 339 மில்லியன் ரூபா ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோயாளர்கள் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்படவுள்ள நிலையில், மின்வெட்டு ஏற்பட்டால் நோயாளர்கள் பெரும் ஆபத்தை எதிர்நோக்க நேரிடும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

இருப்பினும் இந்த விடயம் தனக்குத் தெரியாது எனவும், நாட்டின் எந்தவொரு வைத்தியசாலையினதும் மின் விநியோகம் துண்டிக்கப்படமாட்டாது எனவும் இலங்கை மின்சார சபையின் தலைவர் உறுதியளித்துள்ளார் எனவும் செய்திகள் வெளிவந்துள்ளன. (க)

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# பிரசவத்திற்குப் பின்னான உளப்பாதிப்பு கல்முனையில் விசேட பயிற்சிப்பட்டறை





(நூருல் ஹுதா உமர்)

பிரசவத்திற்குப் பின்னரான உளப் பாதிப்புக்கள் தொடர்பில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களில் கடமையாற்றும் மேற்பார்வைத் தாதிய உத்தியோகத்தர்கள், மேற்பார்வைப் பொதுச் சுகாதார மாதுக்கள் மற்றும் பொதுச் சுகாதார மாதுக்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் அவர்களின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக, தாய் - சேய் நலப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ.எச்.ரிஸ்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில், பிரதிப் பணிப்பாளர் எம்.பீ.அப்துல் வாஜித்தும், வளவாளராக கல்முனைப் பிராந்திய உளநலப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஜே.நௌபலும் கலந்துகொண்டனர்.

# நாவற்குழி மகா வித்தியாலய பழைய மாணவர் ஒன்றுகூடல்



நாவற்குழி மகா வித்தியாலயத்தில் 1982 தொடக்கம் 1992 காலப் பகுதியில் கல்வி கற்ற 92 க.பொ.த.சாதாரண பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் 30 ஆண்டுகள் கடந்து ஒருங்கிணைத்து நடாத்தும் ஆசான்களைப் போற்றி கௌரவிக்கும் நிகழ்வு 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நாவற்குழி மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது

நாவற்குழி மகா வித்தியாலயத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் வெளிநாடுகளில் இருந்தும் உள்நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பழைய மாணவர்கள், அக்காலத்தில் கல்வி போதித்த ஆசான்கள், அதிபர்கள், பழைய மாணவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்

கலந்துரையாடல், கருத்துப் பரிமாற்றம், பழைய நினைவுகளை மீட்டல் எனப் பல்வேறு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

# சம்மாந்துறை வலய விளையாட்டு விழா!





(வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை வலய விளையாட்டுப் போட்டியின் துவக்க விழா நேற்று புதன்கிழமை சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில், வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் ஏ.நசீர் தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டொக்டர் உமர் மௌலானா கலந்து கொண்டார். வலயக்கல்விப் பணிமனையின் கணக்காளர் சீ.திருப்பிரகாசம் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி வைத்தார்.

துவக்க விழாவில் பிரதி உதவி கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள், அதிபர்கள் என்று பல தரப்பினரும் கலந்து கொண்டார்கள். விளையாட்டு விழாவை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.ஏ.மஜீட் பிரகடனம் செய்து ஆரம்பித்து வைத்தார்.



# நைகரில் ஆட்சியைக் கைப்பற்றியது இராணுவம் - ஜனாதிபதி கைதானார்



மேற்கு ஆபிரிக்க நாடான நைகரின் ஜனாதிபதி மொகமட் பசும் திடீரெனக் கைது செய்யப்பட்டுள்ளதோடு, இராணுவத்தினர் அந்த நாட்டின் ஆட்சியையும் கைப்பற்றியுள்ளனர். நைகர் ஜனாதிபதி மொகமட் பசும் அதிகாரத்தில் இருந்து நீக்கப்பட்டார் என அந்த நாட்டின் தேசியத் தொலைக்காட்சியில் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நைகரில் உள்ள அனைத்து அரச, தனியார் நிறுவனங்களது பணிகளும் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், ஜனாதிபதிக்கு ஆதரவாக தலைநகர் நியாமியில் ஏராளமான மக்கள் வீதிகளில் இறங்கிப் போராட்டம் நடத்தி வருகின்றனர் என்றும், போராட்டத்தைக் கலைக்க இராணுவ வீரர்களால் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தின் இந்த ஆட்சிக் கவிழ்ப்புக்கு எதிராக பல்வேறு நாடுகள் தமது கண்டனங்களை வெளியிட்டு வருகின்றன. (மி)

## அல்ஜீரியாவில் காட்டுத் தீ கட்டுப்பாட்டுக்குள் வந்தது

அண்மைய நாட்களில் அல்ஜீரியாவின் பல பகுதிகளில் காட்டுத் தீ பரவியதையடுத்து ஏறக்குறைய 34 பேர் கொல்லப்பட்டதுடன் ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்துமிருந்தனர்.

தற்போது தீ கட்டுப்பாட்டுக்குள் வந்ததையடுத்து, தீயில் கருகிய பகுதிகளுக்குத் திரும்பிய சிலர், தங்கள் வீடுகள், உடமைகள் மற்றும் கால்நடைகளை தீயில் இழந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

வடக்கு அல்ஜீரியா சமீபத்திய நாட்களில் அதிக வெப்ப அலையை அனுபவித்து வருகிறது. வட ஆபிரிக்காவின் பல பகுதிகளில் வெப்பநிலை வழக்கத்தை விட 7 பாகை செல்சியஸ் வரை அதிகரித்துள்ளது.

அல்ஜீரியாவின் வளிமண்டலவியல் திணைக்களம், நாட்டின் வடபகுதியில் இந்த மாத இறுதி வரை 48 பாகை செல்சியஸ்சிற்கும் அதிகமான வெப்பநிலை தொடரும் என எச்சரித்துள்ளது. (மி)

## ஈக்வடோரில் கைதிகள் மோதல் 31 பேர் மரணம்



தென்னமெரிக்க நாடான ஈக்வடோரில் உள்ள சிறைச்சாலையில் கைதிகளுக்குள் ஏற்பட்ட மோதலில் 31 பேர் உயிரிழந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈக்வடோரின் குவாயாகில் உள்ள சிறைச்சாலையில், போதைப்பொருள் வழக்கில் கைதுசெய்யப்பட்டுச் சிறை வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கும் ஏனைய கைதிகளுக்கும் இடையில் அடிக்கடி மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில், நேற்று இடம்பெற்ற மோதலிலேயே இந்த அளவுக்கு உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவத்தில் பல கைதிகள் காயமடைந்திருப்பதாகவும், காயமடைந்தவர்களை சிறைச்சாலைப் பொலிஸார் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்திருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. (மி)

## தென்னாபிரிக்காவில் பல்கலைக்கழக பேருந்து விபத்து - 77 பேருக்குக் காயம்

கடந்த செவ்வாய்க்கிழமை தென்னாபிரிக்காவின் ஜோகன்னஸ்பேர்க்கில் அமைந்துள்ள பல்கலைக்கழகமொன்றின் மாணவர்களை ஏற்றிக்கொண்டு சென்ற பல்கலைக்கழகப் பேருந்து, மற்றுமொரு பேருந்துடன் நேருக்கு நேர் மோதியதில் பெரும் விபத்துச் சம்பவித்துள்ளது.

இந்த விபத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட 77 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இதனையடுத்து மீட்புப் படையினர் சம்பவச் இடத்துக்கு சென்று பயணிகளைக் காப்பாற்றும் பணியில் ஈடுபட்டனர்.

படுகாயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக



உள்ளதாகவும், அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டுவருகின்றதாகவும் கூறப்படுகிறது. (மி)

## சூடானில் எறிகணைத் தாக்குதல் பொதுமக்கள் 16 பேர் உயிரிழப்பு

ஆபிரிக்க நாடான சூடானில் இராணுவத்தினருக்கும் துணை இராணுவத்தினருக்குமிடையே பல நாட்களாக மோதல் நிலவி வருகின்றது.

இந்த நிலையில், தலைநகர் கார்டூமிற்கு மேற்கே ஓம்துர்மன் நகரில், இராணுவ தளத்தின் மீது, துணை இராணுவத்தினர் எறிகணைகளை வீசித் திடீர் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

முகாமுக்கு அருகிலுள்ள சந்தைப் பகுதியில் எறிகணைகள் விழுந்து வெடித்ததில் பொதுமக்கள் 16 பேர் அந்த இடத்திலேயே பலியாகியுள்ளனர்.

கட்டிட இடிபாடுகளில் சிக்கி 50 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்கு ஐக்கிய நாடுகள் சபை கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. (மி)

# ஸ்மார்ட்போன்களுக்கு பாடசாலைகளில் தடை! உலகளாவிய விதிக்கு யுனெஸ்கோ அழைப்பு




பாடசாலைகளில் ஸ்மார்ட்போன்களைப் பயன்படுத்துவதற்கு உலகளாவிய ரீதியில் தடை விதிக்க யுனெஸ்கோ அழைப்பு விடுத்துள்ளது.

யுனெஸ்கோவின் கல்வி - தொழிநுட்பம் குறித்த அறிக்கை, பாடசாலைகளில் தொழிநுட்பம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதைக் கவனமாக பரிசீலிக்குமாறு நாடுகளை வலியுறுத்துகின்றது.

டிஜிட்டல் தொழிநுட்பம் முன்னுரிமை பெறுவதற்குப் பதிலாக, ஒரு கருவியாகச் செயல்படும் மனிதனை மையமாகக் கொண்ட ஆய்வுகளின் அவசியத்தை இது சுட்டிக்காட்டுகின்றது.

செய்தி நிறுவனம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த யுனெஸ்கோவின் கல்வி கண்காணிப்பு அறிக்கைக்கான இயக்குநர் மனோஸ் அன்டோனினிஸ், கல்வி - தொழிநுட்பத்தில் தரவுக் கசிவுகள் ஏற்படும் அபாயம் குறித்து எச்சரித்துள்ளார்.

16 சதவீத நாடுகள் மட்டுமே வகுப்பறையில் தரவுத் தனியுரிமைக்குச் சட்டப்படி உத்தரவாதம் தருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொருத்தமான ஒழுங்குமுறை இல்லாமல் பரந்த அளவிலான தரவு பயன்படுத்தப்படுகிறது என்பதை நாங்கள் அறிவோம். இந்தத் தரவு, பிற கல்வி அல்லாத நோக்கங்களுக்காகவும், வணிக நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. இது நிச்சயமாக ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய ஒன்று. இது உரிமைகளை மீறுவதாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுனெஸ்கோ அறிக்கை, டிஜிட்டல் கற்றல் மூலம் உருவாக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகளையும் எடுத்துக் காட்டுகிறது. கொவிட்-19 தொற்றுநோய்களின்போது, ஒன்லைனில் மட்டும் கல்விக்கு மாறியதால் உலகளவில் அரை பில்லியன் மாணவர்கள் கல்வி கற்பதிலிருந்து வெளியேறியுள்ளதாக அந்த அறிக்கை கோடிட்டுக் காட்டியுள்ளது.

புவியியல் ரீதியாக, ஐரோப்பா மற்றும் வட அமெரிக்க நாடுகளில், ஒன்லைன் ஆதாரங்களில் குறிப்பிடத்தக்க ஏற்றத்தாழ்வை அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

"அனைவருக்கும் கல்வி" என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, தொழிநுட்பம் வடிவமைக்கப்பட வேண்டும் எனவும் யுனெஸ்கோ வலியுறுத்துகின்றது.

டிஜிட்டல் புரட்சி அளவிட முடியாத ஆற்றலைக் கொண்டுள்ளது. சமூகத்தில் அது எவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என்பதற்கான எச்சரிக்கைகள் விடுக்கப்படுவதைப் போலவே, அது கல்வியில் பயன்படுத்தப்படும் விதத்திலும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என யுனெஸ்கோவின் இயக்குநர் ஜெனரல் அட்ரி அசோலே எச்சரித்துள்ளார்.

அதன் பயன்பாடு, மேம்பட்ட கற்றல் அனுபவங்களுக்காகவும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நல்வாழ்வுக்காகவும் இருக்க வேண்டும். அது அவர்களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உளவியல் ஆலோசனையும் தலைமைத்துவ பயிற்சிப் பட்டறையும் – சாய்ந்தமருதில்!





(நூருல் ஹுதா உமர்)

அகில இலங்கை வைஎம்எம்ஏ பேரவையின் அம்பாறை மாவட்டப் பணிப்பாளர் எம் ஐ. எம். றியாஸ் அவர்களின் ஆலோசனையிலும் மனித மேம்பாட்டு அமைப்பின் ஏற்பாட்டிலும், முஸ்லிம் வாலிபர் சங்கம் மாவடிப்பள்ளி கிளையின் அனுசரணையுடன் நேற்று புதன்கிழமை காலை முதல் மாலை வரை உளவியல் ஆலோசனை மற்றும் தலைமைத்துவ ஒருநாள் பயிற்சிப் பட்டறை, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற சாய்ந்தமருது பயிற்சி நிலையக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மனித மேம்பாட்டு அமைப்பின் பணிப்பாளரும் மாவடிப்பள்ளி வைஎம்எம்ஏ யின் தலைவருமான எஸ்.ஏ.முஹம்மட் அஸ்லம் தலைமையிலும், அமைப்பின் உயர்பீட உறுப்பினர்களின் ஒழுங்குபடுத்தலிலும் நடைபெற்ற இந்தநிகழ்வில், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கிழக்கு மாகாண பணிப்பாளர் எம்.பி. சரத் சந்தரப்பால பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கிழக்கு மாகாண காரியாலய நிர்வாக உத்தியோகத்தர் பி.தியாகராஜா, நிலையத்தின் பொறுப்பதிகாரி எ. ஹமீர், கிழக்கு மாகாண காரியாலயத்தின் உஸ்தியோகத்தர்கள், மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஏ. அலி, நிலையத்தின் போதனாசிரியர்கள் என பலரும் நிகழ்வில் பங்கெடுத்தனர்.

சாய்ந்தமருது இளைஞர் தொழிற்பயிற்சி நிலையத்தில் கல்வி பயிலும் 50 இளைஞர், யுவதிகளும் கலந்து கொண்டு விரிவுரை மற்றும் செயற்பாட்டு ரீதியிலான பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டனர்.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் தேசிய இளைஞர் படையணியின் வாழைச்சேனை பயிற்சி நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி மேஜர் கே.எம்.தமீம், சம்மாந்துறைப் பிரதேச செயலக உத்தியோகத்தர் எஸ். எச்.எம்.இர்பான் மௌலானா கேியோரால் விரிவுரைகளும், பயிற்சியுகளும் நடாத்தப்பட்டன.



# திருகோணமலை மாவட்ட அரச அதிபராக சாமிந்த ஹெட்டியாராச்சி பதவியேற்பு

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக இலங்கை நிருவாக சேவையின் விசேட தர சேவையைச் சேர்ந்த சாமிந்த ஹெட்டியாராச்சி கடமையினை இன்று பொறுப்பேற்றார்.

இவருக்கு முன்னர் மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய பி. எச்.என்.ஜயவிக்ரம ஓய்வு பெற்றதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் திறந்த பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட இவர், 2000 -2006 ஆம் ஆண்டு வரை திருகோணமலை மாவட்டத்தின் கோமரங்கடவெல பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் உதவிச் செயலாளர், சிரேஸ்ட உதவிச் செயலாளர், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர், மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஆகிய பதவிகளையும் வகித்துள்ளார்.




யாழில்
முதல் முறையாக
சிறு கைத்தொழில் முயற்சியாளர்களின்
கொண்டாட்டம்
Tourism
Northern Province
இணைந்து வழங்குவோர்
Visit North
Experience the Hospitality
NCI
CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM
CCIY
UNITY IS STRENGHT
happymarket.lk
அல்லங்காடி
கொண்டாட்டம்
அனுசரணையாளர்
synamon global
JANASHAKTHI Life
Orient Finance
ஒவ்வொரு
சனிக்கிழமைகளிலும்
04:00PM - 10:00PM
யாழ் கோட்டை
(பண்ணை சுற்றுவட்டம்)
NGO Partner
Sustainability Partner
World Vision
SMILE zone
CCH
IDEA FACTORY
THE SOCIAL INNOVATIONS LAB
ஊடக அனுசரணை
ஒழுங்கமைப்பாளர்
காலைக்கதிர்
Kalaikkathir
BirdFather
More Social More Business
happymarket.lk
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்